இல்லை. வேளாங்கண்ணி மற்றும் நாகூருக்குச் செல்கின்ற முக்கியமான சாலையில் அந்தப் பகுதி இருக்கின்றது. ஆகவே, பொது மக்கள் நலன் கருதியும், பயணியர் நலன் கருதியும் அம்மாப்பேட்டை ஒன்றியத்தில் ஒரு பயணியர் விடுதி கட்டித்தர மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாப்பேட்டை ஒன்றியத்தில் பயணியர் மாளிகை இல்லை. எனவே அங்கு புதிய பயணியர் மாளிகை வேண்டுமென்ற கருத்தை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியான பாபநாசத்தில் பயணியர் மாளிகை இருக்கின்றது. பயணியர் அங்கே தங்கிக்கொள்ளலாம். ஒவ்வோர் ஆண்டும் குறிப்பிட்ட அளவில்தான் பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் பயணியர் விடுதி அறிவிக்கப்படுகின்றது. ஆகவே, பாபநாசம் பகுதியிலே பயணியர் மாளிகை இருக்கின்ற காரணத்தினால், அம்மாப்பேட்டையில் புதிதாக பயணியர் மாளிகை கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 302, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

302—

இ.எஸ்.ஐ. மருத்துவமனை

***6414—திரு. கே. தங்கவேல்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூரில் புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை கட்டுவதற்கு கட்டட வரைபடம் தயாரிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கட்டட வரைபடம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டபின், இ.எஸ்.ஐ. மருத்துவமனை திருப்பூரில் கட்டப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.*

திரு. கே. தங்கவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. ஏற்கெனவே பல மாவட்டங்களிலிருந்தும், பல மாநிலங்களிலிருந்தும் ஏராளமான தொழிலாளர்கள் அங்கு வந்து வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். அங்கு இ.எஸ்.ஐ. மருத்துவமனை இல்லாத காரணத்தினால், ஒவ்வொரு முறையும் கோயம்புத்தூருக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இடம் தேர்வு செய்யப்பட்டும், கிட்டத்தட்ட மூன்று, நான்கு ஆண்டுக் காலமாக அதற்கான பணிகள் தொடங்கப்படாமல் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, விரைவாக அந்தப் பணிகளைத் தொடங்கி, நூறு படுக்கைகள் கொண்ட இ.எஸ்.ஐ. மருத்துவமனை கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமாய் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பணி எப்போது தொடங்கப்படும், எப்போது நிறைவுறும் என்பதையும் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை கட்டுவதற்கான இடம் 11 கோடியே 90 இலட்சத்து 72 ஆயிரத்து 566 ரூபாய்க்கு வாங்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோன்று, மாண்புமிகு அம்*

அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர்தான் அந்த இடம் வாங்கப்பட்டது. அதற்குப் பின்னர், முதற்கட்டமாக கடந்த நவம்பர் மாதம் முதல் 72 இலட்சம் ரூபாயில் சுற்றுச் சுவர் கட்டுகிற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தொழிலாளர் நலன் காக்கிற அரசு என்பதால், அதனைக் கருத்திலே கொண்டு மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளுக்கிணங்க, அந்தப் பணி விரைவாக முடிக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் தொழிலாளர்களுக்காக 10 மருந்தகங்கள், பல்வேறு மருத்துவமனைகளில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அறிவீர்கள். என்றாலும் மருத்துவமனைக்கு ஈடாக 20 தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் தொடங்கப்பட்டு, இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும், மருத்துவ வசதி பெறுவதற்காக 6 மருந்தகங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவித்திருக்கிறார்கள். அந்த வகையிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொழிலாளர் நலன் காக்கக்கூடிய அரசாக இன்றைக்குத் திகழ்ந்துகொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 3 ஆண்டுக் காலத்திலே மட்டும் இந்தத் தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகங்களில் ஒரு இலட்சத்து 83 ஆயிரத்து 537 தொழிலாளர்கள் நம்முடைய ஆட்சியிலே பயன் பெற்றிருக்கிறார்கள். கடந்த கால ஆட்சியில், 5 ஆண்டுக்காலத்தில் 57,596 பேர்கள்தான் பயன் பெற்றார்கள் என்பதையும் எடுத்துச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினருடைய பகுதியில் விரைவாக அந்தப் பணி நடத்தி முடிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனால், சுற்றுச் சுவர்

கட்டுகிற அந்தப் பகுதியின் சொந்தக்காரர்கள் வழக்கு நிலுவையில் இருப்பதாகச் சொல்லி தடுத்து நிறுத்துகிறார்கள். நாமும் விரைந்து முடிப்பதில்லை என்ற முறையிலே, வழக்கு இழுத்துக் கொண்டிருக்கிறது. அந்த வழக்கினை விரைவில் முடிக்கிறபோதுதான், கட்டடப் பணிகளைத் தொடங்க முடியும். அதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து கவனத்திலே எடுத்துக்கொள்ளப்பட்டு, அந்த வழக்குகள் எல்லாம் விரைவாக முடிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விதி 110ன்கீழ் திட்டம் அறிவித்தார்கள். அதற்கான பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை. அந்த மருந்தகம் எப்போது தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். திருப்பூரில் தொழிற்சாலைகள் நிறைய இருக்கின்றன; இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பணிபுரியக்கூடிய அந்தத் தொழிற்சாலைகளில், இஎஸ்ஐ. திட்டத்தின்கீழ் தொழிலாளர்களை உறுப்பினர்களாகச் சேர்ப்பதில் குறைபாடுகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே, அவர்களை உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு உடனடியாக எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதியில் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த மருந்தகம் கட்டும் பணி விரைவில் தொடங்கும்

என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட உறுப்பினர்கள் சேர்க்கும் பணியும் நிச்சயமாக இந்த ஆட்சியில் தொடங்கப்படுமென்ற உறுதியைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் நலன் காக்கிற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் எனது திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி, திருமங்கலம் நகரத்தில், இராஜாஜி தெருவில் ஒரு இ.எஸ்.ஐ. மருத்துவமனை இளை செயல்பட்டு வருகிறது. சமீப காலமாக மருத்துவர்களோ, மருத்துவ உதவியாளர்களோ அங்கு இல்லாததால், மதுரையில் இருக்கக்கூடிய இ.எஸ்.ஐ. மருத்துவமனைக்குத்தான் சிகிச்சைக்காகச் செல்லவேண்டிய சூழ்நிலை உருவாகி இருக்கிறது. திருமங்கலம் நகரத்திற்கருகே கப்பலூரிலே ஒரு சிட்கோ தொழிற்பேட்டை இருக்கிறது. திருமங்கலம் அருகே* Metal Powder *தொழிற்சாலை ஒன்று இருக்கிறது. அங்கே ஏராளமான தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிக்கு 40 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மதுரைக்கு செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திருமங்கலம் நகரத்திலே செயல்பட்டு வருகிற இ.எஸ்.ஐ. மருத்துவமனைக்கு நிரந்தரமாக மருத்துவர்கள் மற்றும் மருத்துவ உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கருத்துருக்கள் பல்வேறு இடங்களிலே இருந்து வந்திருக்கின்றன. அவை அனைத்தையும் மாண்புமிகு*

அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உடனடியாக அந்தப் பணியிடங்களெல்லாம் பூர்த்தி செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 303, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

303—

புதிய கட்டடம்

***34368—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, சிங்கிகுளம் ஊராட்சி, நடுவன்குளத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், சிங்கிகுளம் ஊராட்சி, நடுவன்குளம் அங்கன்வாடி மையம் 2010 முதல் தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு சர்வே எண் 490-ல் இடம் தேர்வு செய்யப்பட்டு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், சிங்கிகுளம் ஊராட்சி, நடுவன்குளம் கிராமத்தில் 500 மக்கள் வசிக்கிறார்கள்.*